இந்துசாதனம்

விரோதி வருஷம (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுச] யாழ்ப்பாணம்:- நந்தன ஷூ புரட்டாதிமீ உகூ உ செவ்வாய்க்கிழமை (14 Octo. 1952) [இல - ருக]

விடுமின் வெகுளி வேட்கை நோய்!

திருச்சிற்றம்பலம்.

விடுமின் வெதுளி வேட்கைநோய் மிகவோர் காலமினியில்லை
உடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோடுடன்போவதற்கேயொருப்படுமின்
அடைவோம்நாம்போய்ச் சிவபுரத்துள் அணியார்கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம் புயங்க னுள்வான் புகழ்களையே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் திருநாள்

ஆணவம்என்னவென்றறிந்துணர்ந்த அருணந்திசிவாசாரியர்

—புரட்டாதி 30

அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் திருத்துறையூரிலே ஆதிசைவ மரபிலே திருவவதாரஞ் செய்து அவ்வூரிலுள்ளவர்களுக்குக் குலகுருவாக விளங்கினர். அவர் சிவாகமங்களெல்லாவற்றையும் கற்றுத் தெளிந்தாராகலின் அவருக்குச் சகலாகம பண்டிதர் என்னுங் காரணப் பெயர் உண்டாயிற்று.

அக் காலத்தில், குழந்தைப் பருவத்தராகிய மெய்கண்டதேவ நாயனர் ஞானசாரியராயமைந்து சீடருக்கு ஞான நூல் கற்பிக்கும் வழக்க முடையாரயிருந்தார். ஏனையோர் சொல்ல இச்செய்தியை அறிந்த சகலாகம பண்டிதர் அதைத் தம்பாதுதாமே அவரிடஞ் சென்றார். ஆண்டுச் சென்றபொழுது அவ்வாரவர்கள் யாவரும் அவரை முறைப்படி எதிர் கொண்டு வணங்கி வரவேற்றனர். மெய்கண்டார் மாத்திரம் அவ்வாறு செய்யாது, இருந்தபடி இருந்து மாணவருக்கு, ஆணவ இயல்பு விளக்கினர். தம்மை வணங்கா திருந்ததைக் கண்ட சகலாகம பண்டிதர் அவர்முன் சென்று தமது பாண்டித்தியச் செருக்குடன் ஆணவ சொரூபமாவ தென்ன என்று வினவிக் கேட்டார். மெய்கண்ட வள்ளலோ, இன்னருள் புரியும் நோக்குடன தமது விரலால் அவரது நிலையைச் சுட்டிக்காட்டி இதுவே ஆணவ சொரூபமெனத் தெரிவித்தார், பக்குவ முதிர்ச்சியடைந்த அருணந்தி சிவாசாரியாரோ மெய்கண்ட வள்ளலுடைய திருவடிகளிலே அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கிச் சிவஞான போதப் பொருள் தெளிந்து மெய்கண்ட நாயனரது முதல் மாணாக்கராக விளங்கினர்.

பின்பு சிவஞான போதப் பொருளைச் சிவஞானசித்தியார் என்னும் நூலில் விரித்து விளக்கினர்.

என்னையிப் பவத்திற் சேரா
வகையெடுத் தென்சித்தத்தே
தன்னைவைத் தருளினுலே
தாளிணை தலைமேற் சூட்டும்
மின்னமர்பொழில்சூழ்வெண்ணெய்
மேவிவாழ் மெய்கண்டானூல்
சென்னியிற் கொண்டு சைவத்
திறத்தினைத் தெரிக்கலுற்றும்.

என நூலின்வழி கூறும் சிவஞான சித்திச் செய்யுள் இங்கே கவனிக்கத் தக்கது.

மறைஞானசம்பந்த சுவாமிகளுக்கு ஞானசாரியராய் ஞானோபதேசமுஞ் செய்தார். அதன்பின் சிவோகம்பாவனையால் அகண்ட பரிபூரணதசை எய்தினர்.

உடுவிலில் காந்தி ஜயந்தி

உடுவில் சரோஜினி நூல் நிலையத்தில் திரு. கா. சிதம்பரநாதன் B. A. அவர்களின் தலைமையில் காந்தி ஜயந்தி தினம் கொண்டாடப் பட்டது ஆசிரியர் பயிற்சிக்கழக அதிபராயிருந்து இளைப்பாறிய திரு. J. C. அமரசிங்கம் B. A. அவர்கள் மகாத்மாஜீயின சீவிய வரலாறுபற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினர்.

செல்விகள் சரோஜினிதேவி அருந்ததி காந்திப் பாக்கள் பாடினர். நூல்நிலைய ஸ்தாபகர் திரு. கா. தனபாலசிங்கம் அவர்களுடைய குறிப்புரையோடும் நன்றி கூறலோடும் கொண்டாட்டம் நிறைவெய்தியது.

சுதேச வைத்திய சபை

திரு. க. பாலசிங்கம் அவர்களுடைய இடத்துக்குச் சுதேச வைத்திய சபை அங்கத்தவராய்ச் சிறந்த வைத்திய வழித் தோன்றலாய் விளங்கும் ஆயுள்வேத வைத்தியர் திரு. மு. கதிரவேற்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பெற்றிருக்கின்றனர்.

காரைநகரில் காந்திப் பெரியார் நினைவு

காரைநகர்ச் சைவமகா சபைச் சர்வோதய வாதிகள் கடந்த வியாழக்கிழமை 2-10-52 ந் தேதி மாலை 6 மணி தொடக்கம சைவ மகாசபை மண்டபத்தில் காந்தி ஜயந்தியைக் கொண்டாடினர். விழா முதலியார் சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. ஆசிரியை செல்வி மீனுட்சி ஆறுமுகம் வரவேற்புரை கூறினர்.

அதன்பின்னர் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள இதிகாச புருடர் என்ற பொருளில் காந்தியைப்பற்றிப் பேசும்பொழுது மகாத்மா தனியே அரசியற்றுறையிலே தம் ஆற்றலைக் காட்டிச் சென்றிருப்பாராயின் அவரின்சரிதம் வெறும் சரித்திரமாக — ஹிட்லர், முசலோனியின் சரிதம் போல உப்பில்லாப் பண்டம் போல இருந்திருக்கும் என்றும் ஆனல் மகாத்மாவின் சரித்திரமோ உண்மையும் அகிம்சையும் நிரம்பியிருத்தலினலே இதிகாச சரித்திரமாகும் எனவும் கூறினர். கொல்லாமை, பொய்யாமை என்னும் இரு இலட்சியங்களுக்கும் இலக்கியமாக வாழ்க்கை நடத்தியபடியால் இதிகாச புருஷர், இலட்சிய புருஷர் என்ற இருபெயர்களுக்கும காந்திஜீ தகுதியுடையவரென்றும அவர்செய்தநீதி தருமரின நீதியை ஒக்கும எனறும கூறினர்.

இதன்பின் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மாணவிகளின் அபிநயமும் தொல்புரம் அ. மி. தமிழ்ப்பாடசாலை மாணவிகளின் கும்மியும் நல்லூர் 'ரமணி அஞ்சலி' சபையின் கூட்டுப் பிரார்த்தனையும நடையெற்றன.

இதன்பின்னர் வித்துவான் கா. சிவபாதசுந்தரம் அவர்கள் 'இராட்டையின் செய்தி' என்ற பொருளில் பேசும்போது காந்தி ஜயந்தி இராட்டை ஜயந்தியாகக் கொண்டாடப்பட வேண்டு மென்பதே காந்திஜீயின் கருத்து என விளக்கிப பேசினர்.

தலைவர் தமதுபேச்சில் பகைவனுக்கருள்வாய் என்ற கொள்கையைக் காந்திஜி அநுட்டித்தமை பற்றியும் சாதிக்கட்டுப்பாடுகளை நீக்குவதற்காக அவர் எடுத்துக் கொண்ட முறைகள் பற்றியும் விபரித்தார். ஈற்றில் திரு. சி. கனகசுந்தரம அவர்களின் நன்றியுரையுடனும் தேவார பாராயணத்துடனுச் விழா இனிது நிறைவுற்றது.

கொறிய சமாதானம்

கொறிய சமாதானத்தை உண்டாக்குவதற்கு உதவியாகப் பண்டித நேரு அவர்களின் நன் முயற்சியை அமெரிக்கர் விரும்புவதாக "நியூஸ்வீக்" என்னும் அமெரிக்கப் பத்திரிகையால் அறியவருகிறது.

தோட்டப் பகுதியில் - - இந்துமத இயக்க சபை

மலைநாட்டுச் சமயாபிமானிகளின் அருமபெரும் சேவை

மாத்தளைப் பகுதியில் சைவ சமயத்திலிருந்து பௌத்த மதத்திற்கு மாறியதின் எதிரொலி

தோட்டப்பகுதிகளில் 30 வருடகாலமாகப் பொதுநலச் சேவையில் ஈடுபட்டுத் தன்னலங் கருதாது பிறருக்காக உழைத்துவரும் தொண்டன் ஸ்ரீமான் S.M.S. பொன்னையா அவர்கள் சில நாட்களுக்கு முன் மாத்தளைப் பகுதியில் இந்துமதத்திலிருந்து பௌத்த மதத்திற்கு 300 தோட்டத் தொழிலாளர் மதம்மாறியதைப் பத்திரிகைமூலமறிந்தும் மனந்தாளாது புரட்டாதித் திங்கள் 1?-ம் நாள் (27 9-52) மடுவக்கொல்லைப் பகுதியைச் சேர்ந்த கல்கிறீயா தோட்டப் பாடசாலையில் மாலை 6.30 மணிக்குத் தோட்டப் பகுதிகளில் இருந்து மத உண்மைகளை விளக்கிப் பிரசாரம் செய்து வேறு சமயங்களுக்கு மாருமல் "இந்துமத இயக்கச் சபையை" பல பகுதிகளிலிருந்துவந்த இந்துமத அபிமானிகள மத்தியில் குத்துவிளக்கேற்றித் தொடக்கி வைத்தார்.

தலைவர் பேசும்பொழுது மதாபிமானம் அருகி வருவதால் இச்சபை நிறுவப்பட்ட தென்றும், இச்சபை தோட்டந்தோறுஞ் சென்று பிரசாரஞ் செய்யுமெனறும் இத்துப் பெரியோர்களை அழைத்துப் பிரசங்கங்கள் செய்யுமென்று கூறியதும் மாவுசாத் தோட்டத் தலைமை ஆசிரியர் திரு P.இராசையா அவர்கள் சபையின் வளர்ச்சிக்குக் கையாள வேண்டிய வழிவகைகளை விரிவாக எடுத்துக்கூறினர் குழுமியிருந்த பெரியோர்கள் ரூ 500/= நன்கொடை அளித்தனர் கீழ்க்கண்டவாறு உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்,

போஷகர்கள்:- S. M. S. பொன்னையா M. நடராசா
தலைவர்:. S. M. S. கனகசபாபதி
உபதலைவர்கள்:- M கண்ணையா
A. நடராசா
பொதுக்காரியதரிசி:. A. S. இராசமுத்தையா
நிர்வாக காரியதரிசி:-
R: பாலசுப்பிரமணியம்
தனதிகாரி:- P. S. முத்துச்சாமி

இவர்களுடன் 15 நிர்வாக அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். காரியதரிசி திரு A. S இராசமுத்தையா நன்றிகூறியதும். ஆசிரியர் திரு. A. நடராசாவின் தேவார பாராயணத்துடனும் இந்துமத இயக்கசபை ஓங்க என்ற காகோஷித்துடனும் இரவு 9 30 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

அரசியல் அலை

இந்தியர் இலங்கையராகும் உரிமை

இங்கிலாந்து மந்திரி சபை நீதிக் குழுவினர் தீர்ப்பு

நிலைமை நேர்சீராக அறிகுறி

இலங்கைவாழ் இந்தியர்கள் இலங்கையரே. இது உண்மை யெனினும் அரசாங்கத்தார் 'இலங்கைவாழ்' என்ற சொற்றொடரைப் பலபடத் திரித்து விளக்கத் தலைப்பட்டமையாற் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் இலங்கையர்களாகு முரிமை பெற முடியாது நிற்கின்றனர்.

இது சம்பந்தமான நீதி மன்றத் தீர்ப்புகளும் அவற்றை ஆட்சேபித்து இங்கிலாந்து மந்திரிசபை நீதிக் குழுவினருக்கு விண்ணப்பங்கள் செய்திருப்பதும் எவருமறிந்ததே. இதற்கிடையிலே 'சத்தியாக்கிரக' எதிர்ப்பும் தோன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பிரதமர் இந்த நிலைமையை அவதானித்து நடைமுறைகளைத் துரிதப்படுத்திக் கூடுதலாக உரிமைப் பதிவுகள் நடந்தேற ஒழுங்கு செய்திருப்பதும், இங்கிலாந்து மந்திரிசபை நீதிக்குழுவினர் ஒரு ஆட்சேபனை விண்ணப்பத்தை இந்தியர்களுக்கு நன்மையாகத் தீர்த்திருக்கின்றமையும் பொதுவாக இலங்கை இந்தியர் உரிமைப் பேச்சுக்களை ஒழுங்காகவும் மனக்கசப்பின்றியும நடத்தக்கூடிய வழியைக் காட்டிவிட்டன என்றே சொல்ல வேண்டும.

ஆசிய நாட்டு மக்களுக்கிடையே எதும் அபிப்பிராய பேதமேற்படாதவிதம் அரசியல் அலுவல்களை நடத்துவது ஆசிய தேச அமைச்சர்களைப் பொறுத்ததே. எனவே இந்தியப் பிரதமரும் இலங்கைப் பிரதமரும் இந்த உரிமைச் சச்சரவு போராட்டமாகவிளையாது தீர்த்து வைக்கவேண்டியகாலம் வந்துவிட்ட தென்று உணர்ந்து ஆவன செய்யவேண்டும.

எங்கள் அறிவித்தல்

ஐப்பசி 1-ந் திகதி (17-10-52) வெள்ளிக்கிழமை தீபாவலியின் பொருட்டு சைவப்பிரகாச யந்திரசாலையிற் கடமை யாற்றுவோருக்கு விடுமுறையாகும். ஆகையால் வெள்ளிக்கிழமை (17-10-52) இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.

அதிபர்

THE SAIVAPRAKSA PRESS

வாழக அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ புரட்டாதி மீ உகஉ செவ்வாய்க்கிழமை

தீபம் அடுக்கித் தெய்வந் தொழுமின்

சைவ வாழ்க்கையைச் சீர்செய்யப் பல நியமங்களுள. அவற்றுளே திருநாட்களைச் செவ்வனே கொண்டாடுவ தொன்று. ஒருவித ஆடம்பரமுமின்றி விரதமே நோற்க வேண்டிய சிவராத்திரி, விநாயக சட்டி, கந்தசட்டி முதலியன ஒருதரத்தன. மற்றையவை நன்முறையிலே களிகொள்ளக்கூடிய வைபவங்களோடு விரதமும் இணைக்கப்பட்டுள்ளன. புத்தாண்டு, தைப்பிறப்பு, தீபாவலி இவ்வகுப்பைச் சேர்ந்தன. இவ்வாறு அடிக்கடி அரனை நினைந்து இறைநெறி நிற்கக்கூடிய திருநாட்களை முற்றிலுங் களியாட்டக் காலங்களாக மாற்றியமைக்க வேடிக்கை விரும்புவோர் நாடுகின்றார்கள் என்ற கவலை சமயாபிமானிகளைப் பிடித்திருக்கின்றது. வாழ்க்கை முறையையே மாற்றிவைத்து உண்டுடுத்துறங்கிவிட்டால் அதுவே போதும் என்றெண்ணி மயங்கும் உலோகாயதர்கள்தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்றதென்றே சொல்ல வேண்டும். ஆகையினால் இவ்விதத் தடுமாற்றம் இருக்காது தடுக்கச் சைவ சங்கங்கள் திருநாட்களில் முறைப்படி ஒழுகி முன்மாதிரி காட்டவேண்டும்.

தீபம் அடுக்கித் தெய்வந் தொழவேண்டிய ஐப்பசித் திங்களில் வரும் நரக சதுர்த்தசி நாளன்று இந்நாட்டிலே மதுவும் மாமிசமுமே உண்டு வெறிகொண்டு உணர்ச்சி யற்றுப் பொல்லாச் செயல்கள் பல புரிகின்றார்களென்றாற் சைவப்பிரசாரம் போதியதாக நடைபெறவில்லையென்றே கூறவேண்டும். நரகாசுரன் நினைக்கொணாத் தீமை புரிந்து நிமலனருளால் உயிர் நீக்கவேண்டியகாலை நல்லறிவுபெற்று எதை நாடினன் என்பதை அறியாது எவ்வாறு இத்தொழிலை அவ்வசுரன் செய்தானோ அத்தினத்திலே அத்தகைய அடாத காரியங்களைப் புரிவதே வேண்டப்படுவதென்று மதுவும் மாமிசமும் உண்ணுபவர்கள் சைவர் ஆகார்.

மயக்கமாம் இருள் நீக்க அறிவெனும் ஒளி பரப்பி வைக்க வேண்டிய திருநாளில் மதுவுண்டு மயங்கிநிற்பாராயின் அவர்கள் தம்மாவி போக்க மருந்துண்பார் போலல்லவா நடக்கின்றார்கள். தீபம அடுக்கடுக்காக வைத்துத் தெய்வந் தொழும் பழக்கம் இந்நாட்டில் இத்தினத்தில் இல்லாமையும் ஒரு குறையே. உண்மையை உணர ஒளி மிக வேண்டும். திருவிளக்கேற்றிச் சிறப்புறவமைத்துச் சிவனைச் சிந்தை செய்யுமபோதெல்லாம் மனத்திருள் அகன்றிடும்.

பழையன களைந்து புதிய ஆடை போர்க்கவேண்டுமென்ற நியமமும் இத்திருநாளுக்குரியது இங்கே தூய்மையின் அத்தியாவசியகத்தை இச்செயல் நன்கு விளக்குகின்றது. நீராடிப் புதிய ஆடை உடுத்துக் கொள்வது புறத்தூய்மையைக் கொடுக்குமெனின் அதற்குத்தக அகத்தூய்மையும் பெறுதல் வேண்டும். அவ்வாறு மனச்சுத்தம் அமைவதற்கு வாய்மை ஒழுக்கம் வேண்டும். எனவே இத்திருநாளிலே புறத்தே புனிதம் பொருந்தினும் அகத்தே சுத்தம் அமைவதற்கு உண்மை நெறி நிற்கும் ஒழுக்கம் கடைப்பிடித்தல் வேண்டும்.

இன்னமும் பொருளாதார முறையிலே நோக்குமிடத்துப் புதிய ஆடை அணிதல் வேண்டுமெனபதால், அவ்வித ஆடைகளைப் பெறுவதற்குரிய முயற்சியை அந்த ஆண்டிலேயே செய்து போதிய பணம் சேகரித்தல் அவசியம் என்பது போதருகின்றது. எனவே ஆன்மவியலிலும் உலகியலிலும் நன்னோக்கான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது, முயற்சி திருவினையாக்கும் என்றும் அவ்வித ஊக்கத்தினாலே புதிய ஆடை பெறுதல்கூடும் என்றுங் உடற்சுத்தம் அமைத்தல் வேண்டுமென்றும உண்மை ஒழுக்கம் அவசியமென்றும, அலங்காரமாகத் திருவிளக்கேற்றி ஆலயஞ்சென்று அரன்கழல் பூசனை செய்ய வேண்டும் என்றும் இத்திருநாளை நெறிமுறை கொண்டாடுபவர்கள் அறிவர்.

சமயப் பிரசாரம்;

அருணந்தி சிவாசாரியார் குருபூசை

நாள்: நந்தன புரட்டாசி ௨௦௨ (15-10-52) புதன்கிழமை
நேரம்: மாலை 6 மணி.
இடம்: சைவாச்சிரம
நாவலர் மண்டபம்.
நிகழ்ச்சி: கடவுளாராதனை
பிரசங்கம்:
அருணந்திசிவாச்சாரியர்
பிரசாரகர்
பண்டிதர் பிரம ஸ்ரீ,
வ. மு. இரத்தினேசுவர ஐயர்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
9—10—52.

கவிமன்னன் கம்பனே

நுண்மதிவளமிக்க நூல்தந்தோன்

கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்று அறிஞர்கள் சிறப்பித்துக் கூறுவது ஒருபுனைந்துரையன்றென்பது அவனாற் பாடப்பட்ட இராமாவதாரம் என்னும் பெருங் காப்பியத்தினுள் வரும் சில செய்யுள்களின் அரும் பொருள்களையும், அப்பொருள்களைச் சந்தர்ப்பம நோக்கி அமைத்துக் கூறும் சமயோசித புத்தியையும் நுணிந்து நோக்குவார்க்கு நனகு புலப்படும். அவன் சமயோசிதமாகக் கூறும் அப்பொருள்களை நோக்குமிடத்து அச்சிறப்புப் பெயர்தானும் அவனுடைய நுண்மதிக்குப் போதியதாகாது. அவனுடைய சமயோசித புத்தியைக் காட்டும் சில செய்யுட்கள் இங்கே காட்டத்தக்கனவாகும்.

வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களால் தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியாசாலைப் பொன்மலர் வெளியீட்டில் எழுதப்பெற்றது.

இராமன் பஞ்சவடியிற் சென்று பர்ணசாலையை அமைத்து அதில் இருக்கும்போது அங்கே சென்ற சூர்ப்பனகை இராமனைக்கண்டு அவன் அழகில் ஈடுபட்டு மயங்கிக காதல் கொண்டாள். காதல் கொண்டு அவன் தன்னை விரும்பத்தக்க ஒரு வடிவம் எடுத்துக்கொண்டு இராமனை அணுகித் தன்னை மணக்குமாறு இரங்கி நின்றாள். அப்பொழுது சீதையும் அங்கே வந்தாள். வந்த சீதையைக்கண்டு அவளுடையபேரழகைநோக்கிய சூர்ப்பனகை, "இவள் தன்பக்கத்தில் இருக்கும்வரை இவன் என்னை விரும்பான். ஆதலால் இவளைத் தூக்கிக் கொண்டு சென்று மறைத்துவிட்டு வந்து இவனை உடன்படுத்திக் கூடுவேன்" என்று எண்ணி, இராமன் இல்லாத சமயம் நோக்கி, சீதையைத் தூக்கிக்கொண்டு செல்ல முயன்று இலக்குவனால் மூக்கு முதலிய உறுப்புக்கள் அறுப்புண்டாள், அறுப்புண்டுந் தன் காமந் தணியாதவளாய்ப் பின்னுஞ் சென்று இராமனை இரந்து அவனாற் கோபிக்கப்பட்டு அவனை விட்டு நீங்கினாள். நீங்கியவள் இராவணனிடஞ் சென்று சீதையின் அழகைப் பற்றிக் கூறினாள். கூறுகின்றபோது இராவணனுக்குச் சீதைபாற் காதலை எழுப்பத்தக்க விதமாகக் கூறவேண்டுமென்று கருதி அவ்வாறே கூறுகின்றாளாகச் சூர்ப்பனகை மேல்வைத்து,

"பாகத்திலொருவன் வைத்தான்
பங்கயத்திருந்த பொன்னை
ஆகத்திலொருவன் வைத்தான்
அந்தணன் நாவில் வைத்தான்
மேகதின் மின்னைமுன்னே
வென்ற நுண்ணிடையை நீயும்
மாகத்தோள் வீரபெற்றாலெங்ஙனம்
வைத்து வாழ்தி"

என்று சமயோசிதமாக கம்பன் கூறுவதை நோக்கும்போது அவனுடைய மதி எத்துணை நுட்பமாகச் செல்கின்றது! எவ்வளவுக்குச் சீதையின் அழகை மேம்படுத்திக் கூறலாமோ அவ்வளவிற்கு மேமபடுத்திக் கூறுகின்றான். எங்ஙனமெனில் முத்தேவர்களுள் ஒருவராகிய சிவன் தன் மனைவியை அவள் அழகு நோக்கி அவளைப் பிரிய முடியாமையினாலே தன் உடம்பின் ஒரு பாகத்திலேயே வைத்துக் கொண்டான். நாராயணனோ தன் மனையாளை அழகு நோக்கி மார்பிலே வைத்துக் கொண்டான். பிரமனும தன் காதலியைத் தன் நாவில் வைத்துக் கொண்டான். அவர்கள் வைத்துக்கொண்ட உறுப்புக்களிலே அவர்கள் மனைவியர்களாகிய அப்பெண்களினும் சிறந்த ஒரு பெண்ணை நீ வைத்தால் அவ்வழகிற்கு அது பெருமையாகாது. ஆதலால் நீ அங்ஙனம் வைக்கமாட்டாய். அவளை நிலத்திலும் வைக்காய்! அப்பேரழகியை நீ அவ்வுறுப்புகளிலும் சிறந்த உறுப்பிலேதான் வைத்து வாழ விரும்புவாய்! அவற்றினுஞ் சிறந்த உறுப்பு உத்தமாங்கமாகிய தலையே. ஆதலால் அதிலேதான் நீ வைத்துவாழ விரும்புவாய்! என்று அவனுடைய காதலை மிகவும் எழுப்பத்தக்க விதமாகக் கூறும் நுண்மதி எவ்வளவு அதிசயிக்கத்தக்கதாகும்.

இவ்வளவிலும் அவன் நுண்மதி அமைகின்றதா? அதன் மேலும் நுணுகிச் செல்கின்றது. அங்ஙனஞ் செல்லும் நுண்மதியினாலே சந்தர்ப்பம் நோக்கி அவன் காதலை எழுப்புமாறு அச்சூர்ப்பனகை கூற்றாக அமைத்த மற்றொரு பாடலும் நோக்கத்தக்கதாகும்.

"பிள்ளைபோற் பேச்சினாளைப்
பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வ
மவளுக்கே கொடுத்தியையா
வள்ளலே யுனக்கு நல்லேன்
மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளை போன் மொழியார்க்
கெல்லாம் கேடுசூழ்கின்றே
[னன்றே".

என்னும் இதன்கண் 'அண்ணா! நீ சீதை என்னும் பேரழகியைப் பெற்றால் நின் அரசச் செல்வம் முழுவதையும் அவளுக்கே தவறாது கொடுப்பாய். அதனால் நின் அந்தப்புரத்திலுள்ள பெண்களெல்லாம் அவளைக் கொண்டு வரச்செய்த என்பால் மிகக் கோபங்கொண்டு தங்களுக்குக் கேடுசூழ்த்தாள் என்று கருதி என்னை வெறுப்பார்கள்' என்று அவனுக்கு முன்னையினும் காதலை மிகுதிக்குமாறு கூறியதை நோக்கும்போது, அவனுடைய நுண்மதி, ஒன்றைக் குறித்துப் பாடுங்கால் பாடப்பாட எவ்வளவு உயர்ச்சி அடைகின்றது என்பது அறியத்தக்கதாகும். நின் செல்வமெல்லாம் அவளுக்கே கொடுத்தி என்றதினாலும் நின் அந்தப்புர மகளிர்க்கெல்லாங் கேடு சூழ்தேனாவேன் என்றதனாலும் சீதை நின் அந்தப்புர மகளிரினும் மிக மேம்பட்ட அழகுடையாள் என்பதை அவனுக்குப் புலப்படுத்தி அவனுக்குச் சீதைபாற் காதலை மிகவும் எழுப்பியவாறு காண்க.

இங்ஙனமெல்லாம் சீதையின் அழகை மேம்படுத்திக் கூறவே இராவணனுக்குக் காதற் கனல் மூண்டு எரிகின்றது. எரிகின்ற அக் காதலை மூட்டியது சூர்ப்பனகை இராமன்பால் வைத்த காதற் கனலே. அதனைக் கம்பன்,

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

குற்றம் உணர்ந்த அசுரன் குறித்த நோன்பு

தீபாவலித் திருநாள்

ஐப்பசி 1-ந் திகதி (17-10-52) வெள்ளிக்கிழமை தீபாவலி நாளாகும். இது ஐப்பசி மாசத்து அமாவாசைக்கு முனவரும் சதுர்த்தசித் திதியிலே நிகழ்வது.

தீபாவலி என்பது தீப+ஆவலி எனப் பிரிக்கப்பெற்று, விளக்குகள் நிரையாக அல்லது ஒழுங்காக வைக்கப்பெறுதல் என்னும பொருளைக் குறிக்கின்றது. விளக்கீடும் இப்பொருளதேயாம். விளக்கேற்றும் வழக்கம் ஈழ நாட்டில் "விளக்கீடு" நாளிலேயே சிறப்புறச் செய்யப்பெறுவது.

தீபாவலி நாளிலே, யாவரும் எண்ணெய் வைத்து முழுகிக் கோடிச்சீலை யுடுத்து கோயில் வழிபாடு செய்தல் வேண்டும். இது ஒரு சிறந்த நாளாகக் கருதப்பெற்று உபவாசம் உத்தமம் என விதிக்கப்பெற்றிருக்கின்றது. இந் நாளில் கொலை முதலிய தீவினைகள் எல்லாம் நீக்கி ஆன்மாக்களுக்கு இன்பம் பயப்பனவே செய்து இறை வழிபாடாற்றி ஒளி நெறியில் நிற்க வேண்டுமென்பது ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊன்றிக்கொள்ள வேண்டியது. இத்தகைய தூய நாளிலே மதுபானமருந்தி மாக்களை வதைத்து ஊனுண்டு களிகூடுதல் ஒருபோதும் முறையாகாது; இருள்மிகுந்து அறிவொளி குன்றிய தீவினையின் பாற்பட்டதேயாகும் இத்தீய வழக்கம்.

தீபாவலியைக் குறிக்கும் ஒரு கதையுண்டு. நரகன் என்னும் ஒரு அசுர அரசன் தன் குடிகளை மிக வருத்தி ஆண்டான். குடியானவர்கள் குளித்தல் சீலை தோய்த்தல் முதலிய நற்செயல்கள் செய்தலைத் தடுத்து அவர்களைத் தீயவழியிலே செலுத்திவந்தான். அவர்களுடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டு உருத்திர மூர்த்தியின் ஆணைப்படி விஷ்ணு மூர்த்தியானவர் அவனைக் கொன்றார். தான் இறக்கும் பொழுது தன் குற்றத்தையுணர்ந்த அசுரன், தான் இறக்கின்ற அந்த நாளிலே, கொலை முதலிய பாவங்களை நீக்கி நல்லொழுக்கமுள்ளவர்களாய் விஷ்ணுமூர்த்தியை வழிபடுகிறவர்களுக்கு நல்லன ஈந்தருளுமாறு விஷ்ணுமூர்த்தியை வேண்டினன்.

இங்கே நரகன் என்போன் ஆன்மாக்களின் அறிவை மயக்கி நரகத்துக்கேதுவாகிய கொலை, பொய், களவு, கள், காமம் முதலிய தீய நெறிகளிலே ஆன்மாக்களைச் செலுத்தும் மலமாகும். சிவபெருமானது திருவருளே விஷ்ணுமூர்த்தியாகி அசுரனைக் கொல்லுதலாகிய மல நீக்கத்தைச் செய்தருளுகின்றது. மலம் நீங்குதலும் ஆனம அறிவு விளங்கிச் சிவானந்தப்பேறு சித்திக்கின்றது. இவ்வுயரிய உண்மைகளை ஒவ்வொருவரும் உள்ளத்திற் கொண்டொழுகுதல் இறவா இன்பத்துக்கு ஏதுவாகும்.

புங்குடுதீவில் சில பனைகள் ஐந்து ஆறு வட்டுகளுடன் காணப்படுவதோடு ஆறு வட்டுகளுள்ள ஒரு பனையின் சில வட்டுக்கள் ஆண்பனைகளாகவும் சில வட்டுகள் பெண்பனைகளாகவு மிருக்கின்றன

அடைவு நகை விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம் வண்கிழக்கு கலட்டி 576/5 நம்பர் கடையில் அடைவு பிடிக்கும் தா. சி. குமாரசாமி அன்ட் ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம் அவர்களுடைய கடையில் 1951-ம் ஆண்டு மே மூ தொடக்கம் 1952 ம் ஆண்டு செப்டம்பர் முடிய உள்ள தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் நகைகளை 1952-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிதொடக்கம் மேற்படி இடத்தில் என்னும் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

பொ. இராசரத்தினம்
வெந்தீஸ் மேஸ்தர்
M 134 14-21

வெள்ளிக்கிழமை விரதமும் தீபாவலியும்

வருகிற ஐப்பசி மாசம் 1-ந் திகதி வெள்ளிக்கிழமை விரதமும் அதிகாலையில் தீபாவலி ஸ்நானமும் ஒருங்கு நிகழும். வெள்ளிக்கிழமை விரதமனுட்டிப்போர் அதிகாலையில் ஒரு துளி எண்ணெயை விரலில் தொட்டு தலையில் இட்டு ஸ்நானஞ் செய்து கோடி வஸ்திரந் தரித்துக்கொண்டு சந்தியா வந்தனம் ஆலய தரிசனம் போசனம் முதலியவற்றை முறைப்படி செய்யலாம்.

தேகவியோகம்

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், சிறந்த சமயாபிமானியுமாக விளங்கிய திரு R. S. சுப்பிரமணியத்தின் தம்பியாரும், யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலையில் 45 வருடகாலம் நம்பிக்கையோடும், திறமையோடும் கடமையாற்றிவந்தவருமாகிய திரு. R, S மயில்வாகனம் சென்ற சனிக்கிழமை இரவு தமது மனைவி சுற்றத்தார் துயருற இவ்வுலகவாழ்வை நீத்தனர். இறக்கும்போது வயது 70 வரையிலிருக்கும். இவர் சைவ ஆசாரம் தெய்வ வழிபாடு முதலிய ஒழுக்கங்களுடையவர். இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாளாகிய ஞாயிற்றுக்கிழமை பல சுற்றமித்திரர் முன்னிலையில் ஆனைக்கோட்டைமைதானத்தில் சிறப்பாகநடைபெற்றன, இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

கொழும்பு நகரசபை மண்டபத்துள் இரண்டாம் முறை கள்வர் புகுந்துவிட்டனர்.

X X X

நூறு இயந்திரக்கலப்பைகளைக் கொழும்புத்திட்டத்தின் கீழ் அவுஸ்திரேலியா இலங்கைக்கு உதவுகின்றது.

X X X

அணுக்குண்டு யுத்தம் நிகழ்வதானால் நாகரிக அழிவே அதன் பெறுபேறாகும் ?

வட்டுக்கோட்டை கிராமச்சங்கம்

விளம்பரம்

(1) 1952ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் தேதி நடுப் பகல் 12 மணிவரை வட்டுக்கோட்டை கிராமச் சங்க அக்கிராசனரால் "சங்கரத்தையிலிருந்து சங்கானைக்குச் செலலும் ஒழுங்கை திருத்துவதற்கு சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும்.

(2) கேள்விகள் கிராமச்சங்க காரியாலயத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும். அல்லது றிஜிஸ்டர் தபாலில் கிராமச்சங்க அக்கிராசனருக்கு 21-10-52 ந் உ காலை 12 மணிக்கு முன் அனுப்பப்பட வேண்டும். கேள்வியைக் கொண்டதாகிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் "சங்கரத்தையிலிருந்து சங்கானைக்குச் செல்லும் ஒழுங்கை திருத்துவதற்கான கேள்வி' என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) ரூபாய் 10/= கட்டுக்காசு கட்டியதன்பேரில் கிராமச் சங்க அக்கிராசனரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். கட்டுக் காசு கட்டியதற்கான பற்றுச்சீட்டு கேள்வியுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(4) கேள்விகளில் உள்ள மாற்றங்கள், அழித்தல்கள் யாவும் கேள்விக்காரரின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்படல்வேண்டும்.

(5) அவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் அல்லது கிராமச்சங்க தலைவர் கற்பிக்கின்றபடி ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கத் தவறும் கேள்விக்காரர் எவருக்கும் கேள்விக் கட்டுக்காசான ரூபாய் 10/= திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

A. T. VETHAPARANAM,
கிராமச்சங்கத்தலைவர்,
8-10-52. வட்டுக்கோட்டை.
M. 132 14 10-52

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. சரமபன் விசுவலிங்கம் பொன்னுத்துரையும்
2. ஷையூர் பெண் கமலாம்பிகையும் —வழக்காளிகள்

இல. 5041 எதிர்

இறந்துபோன,

1. வேலணை மேற்கு வேலுப்பிள்ளை கந்தையா
2. ஷையூர் பெண் செல்லம்மா —எதிராளிகள்.

1. வேலணை மேற்கு வேலுப்பிள்ளை கந்தையா பெண் செல்லம்மா
2. ஷையூர் கந்தையா மகள் தவமணி
3. ஷையூர் கந்தையா சொர்ணலிங்கம்
4. ஷையூர் கந்தையா மகள் திருமேனி 2 ம், 3-ம், 4-ம் பதில எதிராளிகள் பராயமற்றவர்கள் அவர்களின் பராபரிப்புக்காரி முதலாம்பதில்எதிராளி —பதில் எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 5041-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக் காணிகளையும் 1952௵ ஐப்பசி௴ 25௳ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா: 22 3/68-ம் அதற்கு 24-11-51 தொடக்கம் இறுபடும் வரைக்கும் 5 வீதமான வட்டியும், கோட்டுச் செலவு ரூபா: 54/40 சதம்.

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை மேற்கிறை "ஆலம்புலம்" பர. செ. இல- மூப்பத்திரண்டும் வீடும் கிணறும் பனைகளும்; எல்லை கிழக்கு கந்தையா கைம்பெண் முத்துப்பிள்ளையின் ஆதனம், வடக்கு கணபதிப்பிள்ளை பெண் அன்னத்தினாதனம், மேற்கு சதாசிவம் பெண் சீவரெத்தினமாவினாதனம் தெற்கு முருகேசு பெண் இராசம்மாவிற்கும் சீனி துரையப்பாவிற்கும் வேலுப்பிள்ளை கந்தையாவிற்குமுரிய ஆதனங்கள்.

2. ஷையிறை "ஆலம்புலம் பிரிவுகள்" பர. செ. இல- பத்தொன்பது குளி இரண்டு (பர. செ. இல- 19 குளி 2) இது ஆலம்புலம் பிரிவுகள் என்னும் காணி பர. செ இல- முப்பத்துநாலில் (பர. செ. இல- 34) சிந்தயான வடபாகமும் தென்னைகள் பனைகள் வேம்புகள் கொட்டில்களும் எல்லை கிழக்கு கந்தையா கைம்பெண் முத்துப்பிள்ளையின் ஆதனமும் கந்தசாமி பெண் செல்லம்மாவின் ஆதனமும் வடக்கு வேலுப்பிள்ளை கந்தையாவின் ஆதனம் மேற்கு முருகேசு பெண் இராசம்மாவின் ஆதனம் தெற்கு முருகர் மருதையினாரினாதனமும் பாதை முகப்பும் இதிற் சொரியலாயரைவாசி.

3. ஷையிறை கற்புளி வயலும் கற்குளிவயல் கிழக்கு மவன்னிடையும கற்குளி வயலும் பர. செ இல- எட்டே முக்கால் (பர. செ. இல- 8¾) எல்லை கிழக்கு முருகேசு மயில்வாகனத்தினாதனம் வடக்கு முத்தையா பெண் சிவபாக்கியத்தினாதனம் மேற்கு செல்லத்துரை பெண் வையகத்தினாதனம் தெற்கு வயித்திலிங்கம் செல்லத்துரையின் ஆதனம்.

4. ஷையிறை "ஆலம்புலம் சிரமனை" பர. செ. இல- இருபத்தொன்றேகாலேயரைக்கால் (21⅛) எல்லை கிழக்கு கந்தையா பெண் இராசம்மாவிற்கும வேலாயுதர் சிவசம்புவிற்கும் பங்காளருக்குமுரியவாதனம் வடக்கு நாகலிங்கம் பெண் சின்னாச்சிக்குரியவாதனம், மேற்கு மருதப்பு சுந்தரத்திற்கும் பெண் சிவக்கொழுந்துவிற்குமுரிய வாதனம் தெற்கு நாகலிங்கம் செல்லப்பாவிற்கும் பெண் பாக்கியத்திற்குமுரியவாதனம்.

5. ஷையிறை "வென்னடைபீலிகொண்டை" பர. செ. இல- பன்னிரண்டரை (பர. செ. இல- 12½) எல்லை கிழக்கு வீரபத்திரர் கதிர்காமருக்கும் பங்காளருக்குமுரிய வாதனம் வடக்கு கணபதிப்பிள்ளை தறபரானந்தத்தினாதனம் மேற்கு கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்துவிற்கும் நாகலிங்கம் மகள் தங்கம்மாவிற்குமுரிய வாதனம் தெற்கு துரையப்பா பெண் நாகரெத்தினம்மையினாதனம்.

1951-ம ஆ புரட்டாதி௴ 15௳
ஐ. ஏரபமூர்த்தி
கொமம்ஷனர்.

கந்த விரதம்பூண்டு கருணை பெறுக

ஐப்பசித் திங்களில் திரு முருகன் வழிபாடு

அமர ரிடர்தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

கந்தசட்டி விரதமாவது ஐப்பசி மாசத்துப் பூருவபக்கப் பிரதமை முதல் சஷ்டியீறாகிய ஆறுநாளும் சுப்பிரமணியப் பெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இந்த ஆறு நாட்களிலும் காலையில் ஸ்நானமும் சந்தியாவந்தனை முதலியனவும் செய்து உபவாசமிருந்து பெருமானை வழிபடுதல் உத்தமம். இந் நாட்களில் சிறிது நீர்மாத்திரம் உட்கொள்ளற்பாலது.

மூந்திய வைகலாதி மூவிரு
நாளுங் காலை
யந்தமில் புனலின் மூழ்கி
யாடையோரிரண்டு தாங்கிச்
சந்தியிற் கடன்கள் செய்து
தமபவிம பங்கும் பத்திற்
கந்தனை முறையே பூசை
புரிந்தனர் ககதுற் போதில்,
நிறைதரு கட்டிகூட்டி நெய்யினாற்
சமைக்கப்பட்ட
துறை தவிர் மோதகத்தைக்
குமர நாயகற் கருத்திப்
பிறவுள விதியுஞ் செய்து
பிரான் றிருப் புகழ் வினாவி
யுறுபுனல் சிறிதுமாந்தி யுபவசித்
திருந்தார் மாதோ.

இவ்வாறு அநுட்டிக்க இயலாதவர் முதலைந்துநாளும் ஒவ்வொரு பொழுதுண்டு சஷ்டியிலே உபவாசஞ் செய்வர்.

முன்னொரு காலத்திலே கந்த விரதமான்மியத்தை வசிட்ட முனிவரிடம் முசுகுந்தன் கேட்டறிந்து அறிந்தபடி மேலே கூறியவாறு கந்தசஷ்டிவிரதத்தை அநுட்டித்து உலகம் முழுவதையும் ஆளும் வரத்தைப் பெற்றானென்பது கந்தபுராணம்.

என்ற காலையின் முசுமுகமுடை
யவ னேந்தாய்
நன்று பாரெலா மெனது செங்
கோலிடை நடப்பான்
வென்றி மொய்ம்பின னாதியாம்
வீரரை யெல்லா
மொன்று கேண்மையிற் றுணை
வராத் தருதி யென்றுரைத்தான்.

மன்ன னிவ்வகை வேண்டு
கோள் வினவுறு வள்ள
லன்ன வாறுனக்குதவுவ
மென்றருள் புரிந்து
மின்னல் வாட்படை வீர
மொய்ம்பன் முதல் விளம்புந்
துன்னுதானை யந்தலைவரை
நோக்கியே சொல்வான்.

ஆகையினால்,

"அருவமுமுருவுமாகி யநாதியாய்ப்
பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப்
பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங்
கரங்கள் பன்னிரண்டுங் கொ
யொருதிரு முருகன்வந் [ண்டே
தாங் குதித்தன னுலகமுய்ய"

என்றவாறு ஆன்மாக்களாகிய நாம் இம்மை மறுமை இன்பங்களைப் பெற்றுக் கடைத்தேறும்பொருட்டு அருவமாகியும் உருவமாகியும் அருவுருவமாகியும் ஏகனாகியும் அநேகனாகியும் நிற்கின்ற சோதிசொரூபியாகிய பரசிவப் பொருளே எமாட்டுக்கருணைததும்பும் ஈசானம் தற்புருடம், அகோரம் வாமதேவம் சத்தியோசாதம் என்னும் ஐந்துடன் அதோமுகமுமாகிய ஆறுதிருமுகங்களுடனும் பன்னிரு திருக்கரங்களுடனும் ஒரு திருவுருவம் கொண்டெழுந்தருளிக் கந்தன் முருகன் என்னக் கருணை கூர்ந்தருளுகின்றார். இத்தகைய முருகப்பெருமானுடைய விரதத்தைவிதிப்படி அநுட்டித்து,

ஆகையா லயனறியா வருமறை
மூலந் தெரிந்த
வேகநாயகன் விரத மெவரேனும்
போற்றியிடி
னேகையா னினைந்த வெலா
மோல்லைதனிற் பெற்றிடுவர்
மாகமேலிமையவரும் வந்தவரை
வணங்குவரே.

என்றபடி விரும்பிய விரும்பிய வரங்களை விரும்பிய விரும்பிய வாறு பெற்று இன்புற்று வாழ்வோமாக.

"மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற
வீராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல்போற்றிபோற்றி'.

உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 19—10—52——26—10—52

மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

ஞாயிறுந் திங்களும் புதுமுயற்சிக்குகந்தவை. செவ்வாய் புதன் வியாழன் அவதானமாக விருக்க வேண்டும். மறுபடி நிலைமை நல்லதாய்விடும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

வரவுக்கு மேலாக செலவு அதிகரிக்கும். முயற்சிகளிற் போட்டி குறைந்துபோக அநுகூலம் ஏற்படும். வியாழன் மாலை வெள்ளி சனி எச்சரிக்கையாயிருத்தல்நன்று

மிதுனராசி மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

தேகசுகத்தில் மிகுந்த கவனம் எடுக்கவேண்டும். சொந்தவிஷயங்களில் நல்லகாலம். தனலாபத்துக்குமிடமுண்டு. ஆனால் அதிகம் செலவழிக்கவேண்டும்.

கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

குடும்பப்பகுதியில் திருத்தம் நிச்சயம், புதுத்திட்டங்கள் சித்திபெறும். வார இறுதியில் நஷ்டங்களிலிருந்து நீங்க நண்பர் உதவி செய்வர்,

சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

இந்த வாரம் ஆபத்தான சிக்கல்கள் நீக்கக்கூடியதாயிருக்கும். நண்பர் அதிக உதவி செய்வர். குடும்ப சமாதானமும் மனச் சமாதானமும் நிச்சயம்.

கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்தவாரம் சொந்த விடயங்களிற் சில திருத்தம் நிச்சயம். தனலாபங்களும் நிச்சயம். வார இறுதிக்கு முன் எதையும் புதிதாகத் தொடங்கலாம்.

துலாம் சித்திரை 3,4ம்பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

சிறிது காலத்துக்குத் தேகசுகத்தைப்பற்றி மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சிறு உத்தியோகத் தொந்தரவுகளுக்குமிடமுண்டு புதுமுயற்சிகளைச் சிறிதுகாலத்துக்குப் பின்போடவும்.

விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

இந்த வாரம் இனத்தவர் பெரும் பணசெலவு விளைவிப்பர். மனச்சலனத்துக்கும் உத்தியோகத்தொந்தரவுக்குமிடமுண்டு, இந்த வாரம் ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

இவ்வாரம் செலவழிக்கும்எந்தப் பணமும் நன்மையைதரும். மனச்சமாதானம்தூரத்தில்நிற்கும். ஆனால் உத்தியோகதுறையில்நல்லகாலம்.

மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் பெண்ணின நண்பர் சிறிது கோபத்தை யுண்டாக்கக்கூடும், எந்தவிஷயத்திலும் ஆராயாத முடிபுகள் செய்ய வேண்டாம். செலவு அதிகரிக்கும். ஆனால் வேண்டிய பணம் வரும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

இந்தவாரம் மிகுந்த முயற்சி செய்யவேண்டும். மனநிம்மதிகிடையாது. குடும்பத்தில் அபிப்பிராய பேதம் ஏற்படக்கூடும். தர்க்கத்துக்குள் அகப்படாதீர்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

தொழில்முறையிற் தொந்தரவும் சச்சரவுகளும்தோன்றினாலும் அவை பாரதூரமானவையாகா. அவற்றைப்பற்றிக் கவலை வேண்டியதில்லை. பண அதிட்டத்திற்கு இடமுண்டு. ஆனால் காத்திராத செலவுமுண்டு.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்
சுசீலாவின் காதல்
யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆூ
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை

சைவ பரிபாலன சபை
நாவலர் ஆச்சிரம நிதிக்காக

மிக விமரிசையாக நடத்தப்படும்

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்

திறமான
ரூணிமார்க்ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம்ஆூ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
தங்காபரணத்திற்கு சிறந்த ஸ்தாபனம்
நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தானம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் நகரசபை விளம்பரம்

இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சந்தைகளிலும்; வண்டிக் காலைகளிலும், பஸ் நிலையங்களிலும் வாடகை அறவிடும் உரிமையை குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள்.

1953, தை 1-ந் திகதி தொடக்கம், ஒரு வருட காலத்திற்கு கீழ்க்காணும் சந்தைகளிலும், வண்டிக் காலைகளிலும், பஸ் நிலையங்களிலும் வாடகை அறவிடும் உரித்தைக் குத்தகையாய் எடுப்பதற்கு முத்திரிரை யிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாழ்ப்பாணம் நகரசபை காரியாதிகாரியால் அழைக்கப்படுகின்றன.

நகர சபைக் காரியாலயத்திலிருந்து பெறக்கூடிய இதற்கெனக் குறிப்பிடப்பட்ட பத்திரங்களில் கேள்வி (Tender) அனுப்பப்பட வேண்டும்.

கீழ்க்காணும் வகையில் வைப்புப் பணம் கட்டி இக்காரியாலயத்தில் கேள்விப்பத்திரங்களைப் பெறலாம்:

(1) கீழ்க் காட்டப்பட்டிருக்கும் 1-ம் 2-ம் விஷயங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூபா 500/- செலுத்தப்படல் வேண்டும்.

(2) 3-ம், 4-ம், 5-ம் விஷயங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 250/ செலுத்தப்படல்வேண்டும்.

(3) 6-ம், 7-ம், 8-ம், 9-ம் & 10ம் விஷயங்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூபா. 50/- செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படு முன்னர், ஓர் நொத்தாரிஸ் உறுதிப்பத்திரம் எழுதப்படுவதற்காக நொத்தாரிஸ் சலாருக்கும், முத்திரைச்செலவிற்குமாக, மேலும் ரூ. 150/- 1-ம், 2 ம், 3-ம், 4-ம் & 5-ம் விஷயங்கள் சம்பந்தப்பட்ட கேள்விக்காகக் கட்டப்படல்வேண்டும்.

1952, ஐப்பசி 29-ந் திக புதன்கிழமை பகல் 11-00 வரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

காரியாதிகாரி,(Commissioner) யாழ்ப்பாணம் நக சபை என்று விலாசமிடப்பட்டு, கேள்விப்பத்திரம் இடப்பட்ட உறையின் இடது புற மூலையில் "சந்தைகளுக்கான கேள்வி" என்று அடையாளமிடப்பட்ட எல்லாக்கேள்விகளும் 1952 ஐப்பசி 29-ந் திகதி புதன்கிழமை பகல் 12 மணிக்குப் பிந்தாமல இக்காரியாலயத்தல் வந்துசேர வேண்டும்.

நகரசபைக் காரியாதிகாரியின் காரியாலயத்தில், அதேதினத்தன்று (29-10-52) பகல் 12-30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அதே சமயத்தில் கேள்விப் பத்திரம் அனுப்பியவர்கள் நேரில் சமுகமாய் இருக்கும்படி அழைக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு சந்தை, அல்லது வண்டிக்காலை, பஸ் நிலையத்திற்கும் வெவ்வேறு கேள்வி மதிப்புத் தொகைகள் குறிக்கப்பட வேண்டும்.

சபையால் தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர், அப்படி அவர் தெரிவு செய்யப்பட்ட ஐந்து நாட்களுக்குள், கேள்வித் தொகையின் மூன்றிலொரு பாகத்தை ($\frac{1}{3}$) கட்ட வேண்டியது அவசியமாகும். 6, 7, 8, 9 & 10 "விஷயக் குத்தகைகள்" சம்பந்தப்பட்ட மட்டில் முழுத் தொகையையும் பூர்த்தி செய்ய, மிகுதி தொகை 1952, மார்கழி 1-ந் திகதியன்று அல்லது, அதன் முன் கட்டப்படல் வேண்டும். முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது குத்தகைகளில் ஏற்றுக்கொள்ள பட்ட கேள்விக்காரர் 1952, மார்கழி 1-ந் திகதியின் முன், முன் கட்டிய ரூ 150/ க்கு மேலதிகமாக, நொத்தாரிஸ் சலாரையும், அதற்கான முத்திரைகளையும் கொடுத்து ஒரு காணியை ஈடு காண்பித்து ஒரு நொத்தாரிஸ் மூலம் உறுதியையும் எழுதிக் கொள்ளல் வேண்டும். மிகுதித் தொகை எட்டுச் சம பங்குகளாகத் தவணை முறையில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் 15-ந் திகதியன்று அல்லது அதன் முன் அத்தொகை கட்டுப்படல் வேண்டும். அப்படிச் செலுத்தப்படும் முதல் தவணைத்தொகை, குத்தகை நிபந்தனைகளின்படி 1953, தை 15-ந் திகதியன்று அல்லது அதன் முன் செலுத்தப்படல் வேண்டும்.

எந்தக் கேள்விக்காரரும் கட்டப்பட வேண்டிய தொகையைக் கட்டத் தவறினும், மேற் சொல்லிய வாறு நொத்தாரிஸ் மூலம் உறுதி எழுதவும் தவறினும், அவாது கட்டுத்தொகை பறிமுதலாய்ப்போகும்; அவாது குத்தகை திரும்பவும் விற்பனை செய்யப்படும்.

எக்காரணமுமில்லாமல், எல்லாக் கேள்விப் பத்திரங்களையும் அல்லது, ஏதாவதொரு கேள்விப் பத்திரத்தையும் தள்ளுபடி செய்யும் உரிமை சபைக்கு உண்டு.

மேலும் எவ்விதமான விபரத்தையும் இக்காரியாலயத்தில் பெறலாம்,

மேற் சொல்லப்பட்ட சந்தைகள்:-

1. பெரிய கடை மரக்கறிச் சந்தை (இரண்டு பிரதான நிரந்தரமான சந்தைக் கட்டிடங்கள், சபையால் கட்டப்பட்ட பல சரக்குக் கடை, சபையின் அங்கீகாரத்துடன் நிறுவப்பட்டிருக்கும் விற்பனைத் தலங்கள், தகரக் கொட்டகைகள், தகரக்கொட்டகைக்கும் தெருவுக்குமிடையிலிருக்கும் நிலப்பரப்பு, விற்பனை இலாகாவிற்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலப்பரப்பு முதலியவைகளைத் தவிர.)
2. பெரிய கடையிலிருக்கும் வண்டிக்காலை, பஸ் நிலையம் உட்பட.
3. பெரிய கடை மீன் சந்தை (அரசாங்கத்தினால் எடுத்துக் கொள்ளப்படும் காலம்வரை மீன் விற்கப்பட்டு வரும் பண்ணைத் துறை உட்பட)
4. சின்னக்கடை (எல்லா இறைச்சிக்கடைகள் புறநீங்கலாக.)
5. செங்குந்தர் சந்தை (இரண்டு அறைகள் உட்பட ஆனல் சபையின் அங்கீகாரத்துடன் நிறுவப்பட்டுள்ள தகரக்கொட்டகை புற நீங்கலாக.)
6. அரியாலைச்சந்தை (அறை புற நீங்கலாக.)
7. முத்திரைச் சந்தை (எடுத்துச் செல்லத்தக்க கடை புற நீங்கலாக.)
8. கொழும்புத்துறைச் சந்தை.
9. நாவாந்துறைச் சந்தை.
10. பாஷையூர் சந்தை.

கே. ஷண்முகம்
காரியாதிகாரி
யாழ்ப்பாண நகரசபை.

Commissioner,
Jaffna Municipal Council.
நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்,
3-10-52

கவி மன்னன் கம்பனே!

2-ம் பக்கத் தொடர்ச்சி

கோபமு மறனு யானக் கொதிப்பு
 மென்றிவைய வெல்லாம்
பாபநின் றிடத்து நில்லாப்
 பான்மைபோற் பற்று விட்ட
தீபமொன் றொன்றை யுற்றா
 லென்னலாஞ் செயலிற்புக்க
தாபமுங் கோப நோயு மாருயிர்
 கலந்த வன்றே.

என்னுஞ்செய்யுளின் 'தீபம் ஒன்று ஒன்றையுற்றால் என்னலாஞ் செயலிற் புக்க தாபமும் காமநோயும் ஆருயிர் கலந்த" என்ற அடிகளிலே விளக்கிக் கூறுகின்றான். ஒரு தீபம் மற்றொரு தீபத்தைப் பொருந்தி அதனாற் கொளுத்தப்பட்டு எரிகின்ற தன்மைபோன்றது என்று சொல்லத்தக்க தன்மையோடு புக்க தாபமும் காமநோயும் எனவே சூர்ப்பனகை கொண்ட காமவேட்கையும் அதனாலான நோயும் இராவணனுக்குக் காமவேட்கையையும் நோயையும் பற்ற வைத்தன என்பதும் ஒன்றினின்றொன்று பற்றி இரு தீபமு மெரிவதுபோல இருவருக்குங் காதற் கனல் மேற்பட்டுக் கொண்டே யிருந்ததென்பதும் பெறப்படவைத்துக் கூறியது காண்க.

இங்ஙனமன்றி ஒரு தீபம் மற்றொரு தீபத்தையேற்றியதுபோலக் காமநோயும் அதனாலாய தாபமும் ஆகிய இரண்டும உண்டாயின என்றுபொருள் கூறல் சிறந்ததன்று. முற்கூறிய பொருள் பொருத்தமாதல்,

மீன் கொண்டோடும் வேலை
 மேகலை யுலக மேத்தத்
தேன் கொண்டோடுங் கூந்தற்
 சிற்றிடைச் சீதையென்னும்
மான் கொண்டோடு நீ யுன்
 வான் வலி யுலகங் காண
யான் கொணடோடும் வண்ண
 மிராமனைத் தருதி யென்பால்.

என்னுஞ் செய்யுளானும், இராவணன் தன்முன் தோன்றிய சீதையின் உருவெளியைக்காட்டி இவள் தானா நீ சொன்ன சீதை யென்ன,

"செந்தா மரைக்கண் ணொடுஞ்
 செங்கனி வாயி னோடும்
சந்தார் தடைக்தோ ளொடுந்தாழ்
 தடக் கைகளோடும்
அந்தா ரகலத் தொடுமஞ்சனக்
 குன்ற மென்ன
வந்தானிவனாகுமவ் வல்வி
 லிராம னென்றாள்."

என்று சூர்ப்பநகை கூறியதாகச் சொன்ன செய்யுளானும் உற்று நோக்கி அறியத்தகும்.

இராவணன் தன்முன் தோன்றிய உருவெளியைக் காட்டி இவள் தானா சீதையென்று சூர்ப்பனகையை வினவ, அவளுக்குத் தோன்றக்கொண்டிருந்த இராமனுரு வெளி அங்கும் அவளுக்குத் தோன்றுதலால் அவள் இவன்தான் இராமன் என்று கூறினாள் என்ச் சமயோசிதமாக நகைச் சுவையை யமைத்து எவர்க்கும் பெருஞ் சிரிப்புத்தோன்றக்கூறிய கம்பனது மதிநுட்பம் எந்தக் கவிக்குத்தான அமையும்?

கவிகள் எப்போதும் ஆழ்ந்த பொருளுடையனவாகவும், அப்பொருளை மிக வெளிப்படையாகக் காட்டுந் தெளிவுடையவாகவும், ஓசை யொழுக்குடையவாகவும் இருத்தல் வேண்டும். அதனைக் கம்பன் நன்றாக அறிந்ததாற்றான, சூர்ப்பனகைப் படலத்துப் "புவியினுக் கணியாய்" என்னுஞ் செய்யுளில், ஆன்ற பொருளுடந்து புலத்திற்றாகிச் 'சவிபுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந்தழுவி என்றும், பம்பைப்படலத்து,

"எற் பொரு ணாகர்த
 மிருச்சுக யீதெனக்
கிற்ப தொர் காட் சிய
 தெனினும் கீழுறக்
கற்பக மணையவக்
 கவிஞர் நாட்டிய
சொற் பொரு ளாமெனத்
 தோனறல் சான்றது."

என்றும் தெரித்துக் கூறினான். கம்பன் கவிகள் யாவும் இத்தகையவே,

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Tuesday October 14. 1952